செய்தி வெளியீடு எண்: 590 நாள்: 30.08.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (30.8.2018) சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோனேரிப்பட்டியில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு, கவனம் முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையம், அதேபோல, ஏற்கனவே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிகளவில் நோயாளிகள் வருகின்றபொழுது அந்தப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தி, இன்றைக்கு தமிழகம் முழுவதும் மருத்துவ துறை சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது. அகில இந்திய அளவில் பார்க்கின்றபொழுது, மருத்துவத்துறையிலே தமிழகம் முதன்மை மாநிலமாக இன்றைக்கு திகழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையை பார்க்கின்றோம்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை வழங்கப்படவேண்டும், அதோடு, அந்தந்தப் பகுதிகளிலேயே அந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சையை அளிப்பதற்குத் தேவையான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, அவர்களுடைய மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து அம்மா வழியிலே செயல்பட்டு ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும், எந்தெந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் தேவைப்படுகிறதோ, அந்தப் பகுதிகளெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே, மத்தியப் பகுதியான கோனேரிப்பட்டியிலே இன்றையதினம் ஆரம்ப

சுகாதார நிலையம் திறக்கப்பட்டிருக்கின்றது. கோனேரிப்பட்டியைச் வசிக்கக்கூடிய சுமார் 50 ஆயிரம் மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சையை அளிக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாக கோனேரிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அமைவதற்காக அம்மாவினுடைய அரசால் அறிவிக்கப்பட்டு, அதற்குத் தேவையான கட்டடம் கட்டப்பட்டு, இன்றைக்கு திறக்கப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் சுமார் 8 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற பொதுமக்கள் சிகிச்சை பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது.

சேலம் மாவட்டம் மட்டுமல்லாமல், அருகில் இருக்கின்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் இங்கு வந்து சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

சேலம் மாவட்டத்திலே நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தினாலே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் மட்டும், நங்கவள்ளி ஒன்றியம், கொங்கணாபுரம், சித்தூர், வாழவந்தி, பனைமரத்துப்பட்டி, மகுடஞ்சாவடி, அரியாபாளையம், வள்ளிக்கரை, வடுகபட்டி, தும்பல்,பேளூர் போன்ற 12 இடங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டு, தேவையான அளவிற்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை சுட்டிக்காட்டி, அதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு ரூபாய் 9.42 கோடி இந்த கட்டடம் கட்டும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றது.

அதேபோல, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டு அதற்காக புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் சவரியூர், சமுத்திரம், கோனேரிப்பட்டி, பக்கநாடு, செம்மந்தப்பட்டி, கூட்டாத்துப்பட்டி, பச்சனாம்பட்டி, மாட்டையாம்பட்டி, சூலக்குறிச்சி, மஞ்சக்குட்டை, குண்டூர் ஆகிய 11 இடங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டு, அதற்குத் தேவையான கட்டடம்

கட்டப்பட்டு, அதற்காக ரூபாய் 6 கோடி நிதி ஒதுக்கீடு ஆகியவை அம்மாவினுடைய அரசால் செய்யப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 8.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாழவந்தி, நாகலூர், சூலாங்குறிச்சி, கருமந்துறை, தும்பல் போன்ற 5 இடங்களில் தேவையான கட்டடங்களை அம்மாவினுடைய அரசு கட்டிக் கொடுத்திருக்கின்றது.

அதேபோல, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2011–2018–ஆம் ஆண்டு 29.08.2018 வரை ரூபாய் 178.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 2,10,481 பயனாளிகள் பயன் பெற்றிருக்கின்றார்கள் என்ற செய்தியை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

அம்மாவினுடைய அரசு மக்களைப் பேணிக்காக்கக்கூடிய அரசாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு, இறந்தவர் ஒருவரின் உடலிலிருந்து இரண்டு கைகளை எடுத்து, பொருத்தி, தமிழ்நாடு மருத்துவர்கள் சாதனை புரிந்திருக்கின்றார்கள். இன்றைக்கு அவர் Basket Ball விளையாடுகின்ற அளவிற்கு இருக்கின்றார். இந்தியாவிலே எந்த அரசு மருத்துவமனையிலும் இதுபோல் பொருத்தவில்லை.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, தாய்மார்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் திட்டத்தின் வாயிலாக, கருவுற்ற பெண்களுக்கு தேவையான சிகிச்சை அளித்ததன் விளைவாக, மருத்துவத் துறையில், சிறந்த, அற்புதமான திட்டத்தை கொடுத்ததன் விளைவாக, மருத்துவர்கள் சிறந்த சிகிச்சை அளித்து, இன்றைக்கு பிரசவ காலத்தில் இறக்கின்ற குழந்தைகளின் இறப்பு சதவிகிதமும், அதேபோல, பிரசவ காலத்தில் தாய்மார்கள் இறக்கின்ற சதவிகிதமும் குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், உலக வங்கி உதவியுடன், தனியார் மருத்துவமனைக்கு இணையாக, அரசு மருத்துவமனைகளில், நவீன சிகிச்சை அளிக்கக்கூடிய அளவிற்கு தேவையான கருவிகள் வாங்கிக்

கொடுக்கப்பட்டு, சிறந்த மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கக்கூடிய சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றோம். தமிழ்நாட்டில் இருக்கின்ற மருத்துவர்கள் சிறப்பான சிகிச்சை அளித்து, மருத்துவ சேவை அளிப்பதில் அகில இந்திய அளவிலே தமிழகம் முதலிடம் வகிக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பல்வேறு இடங்களில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் அணைக்கு அதிக அளவில் வருகின்றபொழுது, அந்த உபரிநீரை எடுத்து, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற பல்வேறு பகுதிகளுக்கு அளிப்பதன் மூலமாக, அங்கிருக்கின்ற ஏரிகள், குளங்களில் நிரப்புவதன் மூலமாக, நிலத்தடி நீர் உயர்ந்து, குடிப்பதற்குத் தேவையான நீரை, விவசாயிகளுக்குத் தேவையான நீரை வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மேட்டூர் அணை 120 அடி எட்டுகின்றபொழுது, அங்கே மோட்டார் வைத்து, பம்ப் செய்து அதன் மூலமாக மேட்டூர் சட்டமன்றத் தொகுதி மேச்சேரி, நங்கவள்ளி, தாரமங்கலம், எடப்பாடி ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், சங்ககிரி ஒன்றியம் போன்ற பல்வேறு இடங்களுக்கு உபரிநீரை எடுத்து, அந்தந்த பகுதிகளில் இருக்கின்ற ஏரிகளை நிரப்புவதன் மூலமாக நிரந்தர தீர்வு காணப்படுகிறது. உபரியாக இருக்கின்ற நீரை முறையாக பயன்படுத்தியதன் மூலமாக அந்தந்த ஏரி, குளங்கள் நிரப்பப்பட்டு, நீர்நிலை உயர்ந்து, விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. வெள்ளரிவெள்ளியில் நமது நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம், மாநிலங்களவை உறுப்பினர் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.அர்ச்சுனன் ஆகியோருடைய நிதி உதவியுடன் கிழக்குக்கரை கால்வாயிலிருந்து வெளியேறுகின்ற உபரிநீரை, பம்ப் செய்து, ஏரிகளுக்கு தண்ணீரை கொண்டுசென்று, தண்ணீர் நிரப்பப்பட்டு வருகின்றது, இன்னும் 20 நாட்களில் தண்ணீர் நிரம்பிவிடும். வெள்ளரிவெள்ளியில் உள்ள ஏரி முழுவதும் நிரம்புகின்றபொழுது கோணேரிப்பட்டி வரை நீர் செறிவூட்டப்படும், எல்லா இடங்களிலும் நீர்மட்டம் உயரும், அப்படிப்பட்ட திட்டத்தை நாங்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறோம்.

தமிழ்நாடு முழுவதும் எங்கெங்கெல்லாம் உபரிநீர் இருக்கின்றதோ, அந்த உபரிநீரை பயன்படுத்துவதற்காக ஒய்வு பெற்ற 6 தலைமை பொறியாளர்களை நியமித்து அந்தக் குழு, ஒவ்வொரு மாவட்டமாக சென்று, எங்கெங்கெல்லாம் பருவமழை காலங்களில் பெய்கின்ற மழைநீர் எவ்வளவு வீணாக கடலிலே கலக்கின்றது என்பதை கணக்கிட்டு, எந்த இடத்திலே தடுப்பணை கட்டவேண்டும், எந்த இடத்தில் நதியின் குறுக்கே தடுப்பணை கட்டவேண்டும், எந்தப் பகுதியிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, எந்தெந்த பகுதிக்கு வினியோகம் செய்யமுடியும், எந்தெந்த ஏரியிலே நிரப்ப முடியும் என்ற ஆய்வுப்பணியை மேற்கொண்டு, அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் அந்தந்த பகுதிகளில் இருக்கின்ற மழைநீரை ஏரிகள், குளங்கள், ஓடைகள் வழியாக நாம் சேமித்து வைப்பதன் மூலமாக நிலத்தடி நீர் உயரும். ஆகவே, அப்படிப்பட்ட பணியை செய்வதற்காக, முதற்கட்டமாக, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, 1519 ஏரிகளை பரிட்சார்த்த முறையிலே எடுத்து, அந்தப் பணிகள் துவக்கப்பட்டு, வெற்றிகரமாக இருந்த காரணத்தினால், மேலும், இந்த ஆண்டு 1511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அதற்காக 328 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று கொண்டிருக்கின்றன. அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளுக்கு தேவையான நன்மைகளை செய்யவேண்டும், விவசாயிகளுக்குத் தேவையான நீர் ஆதாரத்தை பெருக்கிக் கொடுக்க வேண்டும், பெய்கின்ற மழைநீர் ஒரு துளி கூட வீணாகக்கூடாது என்பதற்காக அம்மாவினுடைய அரசு குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை வகுத்து, அந்த திட்டத்தின் வாயிலாக ஆங்காங்கே உள்ள ஏரிகள், குளங்கள், தடுப்பணைகள் மூலமாக நதிகள், ஓடைகள் வழியாக தண்ணீரை தேக்கி, நீரை சேமித்து மக்களுக்கு வழங்குகின்ற ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

தடுப்பணைக்காக 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அந்த தடுப்பணையின் மூலமாக, மூன்றாண்டுகளிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். ஆங்காங்கே உள்ள ஓடைகள் வருகின்ற நீரை சேமித்து, நதிகள் மூலமாக வீணாகும் நீரை தடுப்பணைகள் கட்டி, நீரை சேமித்து, நிலத்தடி நீரை உயர்த்துவது. அதற்காக 1000 கோடி ரூபாய் ஒதுக்கி, முதற்கட்டமாக 292 கோடி ரூபாய் இந்த ஆண்டு எடுத்துக்

கொள்ளப்பட்டு, 62 தடுப்பணைகள் கட்டுவதற்கான நடவடிக்கையை அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இன்றைக்கு செய்து கொடுக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், ஏரிகள், குளங்களில் பல ஆண்டுகளாக படிந்து, அள்ளாமல் இருந்து வந்துள்ள வண்டல் மண்ணை அள்ளுவதன் மூலம், ஏரிகள், குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு, தேக்கி வைக்கும் நீரின் கொள்ளளவை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அள்ளப்படுகின்ற வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாக பயன்படுத்தப்படுகிறது.

மேட்டூர் அணை கட்டப்பட்டு 83 ஆண்டுகாலமாக தூர்வாராமல் இருந்து, அம்மாவினுடைய அரசால் மேட்டூர் அணை தூர்வாருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தினந்தோறும் 3000 ஆயிரம் லாரிகள் மூலமாக அள்ளப்படும் வண்டல் மண் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இயற்கை உரமாக பயன்படுகிறது. இப்படிப்பட்ட சரித்திர சாதனைகளை இன்றைக்கு படைத்துக் கொண்டிருக்கின்றோம். இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, விவசாயிகளுடைய அரசு, விவசாயத்திற்குத் தேவையான அத்தனை நன்மைகளையும் செய்யக்கூடிய அரசு, விவசாயத் தொழிலாளி வளம் பெறுவதற்காக உழைக்கக்கூடிய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மருத்துவமனை அமைந்த காரணத்தினாலே, ஞாயிற்றுக் கிழமைகளில் இப்பகுதியில் கூடுகின்ற சந்தை அமையாமல் போய்விடும் என்ற தவறான கருத்தை பரப்பி வருகின்றார்கள். ஏற்கனவே, சந்தை கூடியது போல், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சந்தை கூடுவதற்கான இடம் வழங்கப்படும், எக்காரணம் கொண்டும், இந்த சந்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்படாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வியிலே ஒரு புரட்சியை, மறுமலர்ச்சியை அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான், எந்த ஒரு ஆட்சியிலும் செய்யாத அளவிற்கு, இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில்தான், சிறப்பான திட்டங்களை கல்விக்காக கொடுத்திருக்கின்றோம். இதயதெய்வம் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தார்கள். அதே வழியில் செயல்படும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிக் கொடுத்து, ஆக மொத்தம் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிக் கொடுத்து, ஆயிரக்கணக்கான ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் தங்கள் பகுதியிலேயே குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எடப்பாடியிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிக் கொடுத்திருக்கின்றோம். கிட்டத்தட்ட ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் 1350 பேர் அக்கல்லூரியில் குறைந்த கட்டணத்திலே உயர் கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம். அதேபோல, வசதி, வாய்ப்பு இல்லாத காரணத்தினால், மாணவச் செல்வங்கள் வெளியூர் சென்று படிக்கக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தினால், வனவாசிக்கு அருகாமையிலே, அம்மாவினுடைய அரசால் கிட்டத்தட்ட ரூபாய் 52 கோடி மதிப்பீட்டில் பாலிடெக்னிக் கல்லூரி இந்த ஆண்டு திறக்கப்பட்டதன் விளைவாக, அந்தக் கல்லூரியை சுற்றியுள்ள பகுதியிலிருந்து வந்து படிக்கின்ற மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற்றுள்ளார்கள். தற்பொழுது வீட்டிலிருந்து நேரடியாக கல்லூரிக்கு செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அத்தனை இடங்களும் நிரப்பட்டுள்ளன. அதேபோல, பி,டெக். கல்லூரி எட்டிக்கோட்டையில் அடுத்த ஆண்டில் திறக்கப்படவிருக்கின்றது. இதனால் மாணவர்கள் ஏழை, எளிய மாணவச் செல்வங்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி பயில்கின்ற சூழ்நிலை உருவாக்கப்படும்.

எட்டிக்கோட்டைப் பகுதியில் புதிதாக தொழிற்பேட்டை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கி மேம்பாடு அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எடப்பாடியில் இருக்கின்ற சாலைகள் குறுகலான சாலைகளாக இருக்கின்ற காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற காரணத்தினாலே, சுற்றுச்சாலை அமைக்க, அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலேயே, அம்மா

அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்து அந்த அறிவிப்பின்படி, இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து, அந்த சுற்றுச்சாலை அமைத்து எடப்பாடி நகரத்தில் போக்குவரத்து நெரிசல் இல்லாத சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம் என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

எடப்பாடியில், நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக, கோட்டப் பொறியாளர் அலுவலகம் திறக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தமிழ்நாடு மின்சார கோட்டப் பொறியாளர் அலுவலகம் திறக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய பகுதியில் இருக்கின்றவர்கள் இங்கேயே நேரடியாக உயர் அதிகாரிகளை சந்திக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு மேலாக, நம்முடைய பகுதியிலே அரசு மருத்துவமனை அமைக்கப்பட்டு, திறந்த இந்த நேரத்திலே அம்மாவின் ஆசியோடு இங்கே இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடைய முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலே திறக்கப்பட்டதை நான் மகிழ்ச்சியாக கருதுகின்றேன். இதனால், இங்கே நோய்வாய்ப்பட்டால் மக்கள் பல மைல் தொலைவு சென்று சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை மாறி, இங்கேயே மருத்துவ சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. மேலும், அதிகமாக நோயாளிகள் வந்தால் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, **30** படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உருவாக்கி, இங்கேயே ஆபரேஷன் செய்யப்கூடிய அளவிற்கு இந்த மருத்துவமனையை தரம் உயர்த்துவதற்கு அம்மாவினுடைய அரசு முயற்சி எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகச்சிறப்பாக, எழுச்சியாக இந்த விழாவை ஏற்பாடு செய்த மருத்துவத்துறையை சார்ந்த அதிகாரிகளுக்கும், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைய உறுதுணையாக இருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர்.விஜயபாஸ்கர் அவர்களுக்கும், சிறப்பாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த கழகத்தின் நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித்

தலைவர் அவர்களுக்கும் அனைத்து உயர்அதிகாரிகளுக்கும், வருகை தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி.

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**